THE HINDU - ENGLISH

Dated: 20.04.2025

# Amid allegations, only 89 primary and one final appeal filed to contest electoral rolls nationwide

Sreeparna Chakrabarty
NEW DELHI

Even as numerous Opposition parties have made charges of voter roll manipulation, there have been hardly any appeals filed by them on inclusion or exclusion of voters after the publication of the Special Summary Revision (SSR) of the electoral rolls.

As per reports filed by the Chief Electoral Officers (CEO) of 36 States and Union Territories, accessed by *The Hindu*, there have been 89 primary appeals and only one final appeal made before the Maharashtra Assembly polls. Since the Lok Sabha elections held in 2024 and till after the final publication of the SSR on January 7 this year, no other appeal had been made by any political party in any other State.



**Constant change:** The electoral roll is in a state of continuous update throughout the year. FILE PHOTO

The reports filed by the CEOs take into consideration the countrywide SSR of electoral rolls in nearly 10.5 lakh polling booths and all 4,123 Assembly constituencies of the country. It also includes the SSR which was specifically done for States and Union Territories that went for Assembly elections after the Lok Sabha election in 2024, including Maharashtra, Haryana, and Delhi.

The electoral roll is in a state of continuous update throughout the year, except during an election in a constituency for a period from the last date of filing nominations to completion of the election process. With an amendment made in the Representation of the People Act, 1950, four qualifying dates – January 1, April 1, July 1, and October 1 – have come into effect in a calendar year in place of one qualifying date of January 1. However, the Annual Summary Revision with all pre-revision activities is conducted with reference to January 1 of the year only, in which the roll is finally published, as the qualifying date.

Section 24 of the Representation of the People Act, 1961, said appeals contesting the inclusion or exclusion of names on electoral rolls can first be filed with the District Magistrate (DM) and then with the Chief Electoral Officer. Under Rule 27 of the Registration of Electors Rules, 1960, the first appeal to the DM can be filed within 15 days of the order of the Electoral Registration Officer, and the second appeal to the CEO can be filed within 30 days of the order of the DM. However, the delay in filing an appeal can be condoned by DM and/or CEO as per the proviso of Rule 27.

Ever since the Maharashtra Assembly poll results brought the BJP-led Mahayuti back to power, the Opposition Maha Vikas Aghadi has been alleging that there was an unnaturally large number of people added to the list in five months since the Lok Sabha polls.

The Leader of the Opposition in the Lok Sabha, Rahul Gandhi, had claimed that 39 lakh names were added to the rolls before the Assembly elections.

DINAMANI

Dated: 20.04.2025

# பிகார் தேர்தல்: வாக்குச்சாவடி பணியாளர்களுக்கு தேர்தல் ஆணையம் முதல் முறை பயிற்சி

புது தில்லி, ஏப். 19: பிகார் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் நடைமுறை நெருங்குவதையொட்டி, அந்த மாநிலத்தைச் சேர்ந்த 10 அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் 280 பணியாளர்களுக்கு தேர்தல் ஆணையம் முதன் முறையாக பயிற்சி அளித்துள்ளது.

நிகழாண்டு இறுதியில் பிகார் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறுகிறது. இதற்கான வாக்காளர் பட்டியல் விரைவில் தயாரிக்கப்பட இருக்கிறது. இதையொட்டி, அந்த மாநிலங்களின் 10 அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளால் நியமிக்கப்பட்ட முதல்நிலை வாக்குச்சாவடி முகவர்களுக்கு (பிஎல்ஏ-1) 2 நாள்கள் பயிற்சி அளிக்கப்பட்டது.

வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பதற்காக தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்படும் வாக்குச்சாவடி அலுவலர்களுடன் ஒன்றிணைந்து இந்த முகவர்கள் பணியாற்ற உள்ளனர். 2 நாள்கள் பயிற்சியில், தேர்தல் நடைமுறையில் வாக்குச்சாவடி முகவர்களின் பங்கு மற்றும் பொறுப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதுடன் இறுதி வாக்காளர் பட்டியல் குறித்த ஆட்சேபத்தைப் பதிவு செய்வதற்கான வழிமுறைகளும் விளக்கப்பட்டன.

பிழையில்லா வாக்காளர் பட்டியலை இறுதி செய்வதில் இந்த முகவர்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். அந்தவகையில், இப்பயிற்சி திட்டம் மூலம் தங்களின் சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக் கொண்டதாகத் தெரிவித்த பயிற்சியில் பங்கேற்ற பல கட்சி முகவர்கள், தேர்தலின்போது தங்களின் கடமையை நிறைவேற்ற சிறப்பாகத் தயாராகவும், அடுத்தநிலை முகவர்களுக்கு பயிற்சி அளிக்கவும் இது அவர்களுக்கு உதவும் என்றும் அவர்கள் கூறினர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற மகாராஷ்டிர சட்டப்பேரவைத் தேர்தலில் வரைவு வாக்காளர் பட்டியலுக்கும் இறுதி வாக்காளர் பட்டியலுக்கும் மிகப்பெரிய வேறுபாடு இருந்ததாக எதிர்க் கட்சிகள் குற்றஞ்சாட்டியிருந்த நிலையில், அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் அடிமட்ட வாக்குச்சாவடி முகவர்களுக்கு பயிற்சி அளிக்கும் நடைமுறையை இந்திய தேர்தல் ஆணையம் முதன் முறையாக தொடங்கியுள்ளது.

DINAMANI

Dated: 20.04.2025

# வாக்காளர் பட்டியல் திருத்தம் குறித்த விதிகள்: தேர்தல் ஆணையத்துக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு

**சென்னை, ஏப். 19:** வாக்காளர் பட்டியல் திருத்தம் குறித்த விதிகளை கண்டிப்புடன் பின்பற்றுவதை உறுதி செய்ய வேண்டும் என தேர்தல் ஆணையத்துக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

சென்னை . வடபழனியைச் சேர்ந்த மணி என்பவர் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில் கூறியிருப்பதாவது:

2024-ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் வாக்களிக்கச் சென்றபோது, வாக்காளர் பட்டியலில் இருந்து எனது பெயர் நீக்கப்பட்டிருப்பது தெரியவந்தது. இதேபோன்று தியாகராய நகர் தொகுதியில் மட்டும் சுமார் 5,000 வாக்காளர்களின் பெயர் திடீரென நீக்கப்பட்டுள்ளது. எனது பெயர் ஏன் நீக்கப்பட்டது என கோடம்பாக்கம் மாநகராட்சி அலுவலக அதிகாரியிடம் விசாரித்தபோது, நான் அதிமுகவைச் சேர்ந்தவர் என்பதால் பெயர் நீக்கப்பட்டதாகப் பதில் அளித்தார். மேலும், அங்கிருந்த மற்றொரு அதிகாரி, எனது பெயரை பிரசாந்த் என்பவர் நீக்கச் சொன்னார்; அதன்படி நீக்கினோம் என்று கூறினார்.

எனவே, எனது பெயரை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கிய அதிகாரிகள் மீது மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப் பிரிவின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், ஜி.அருள்முருகன் அடங்கிய அமர்வின் முன்பு விசாரணைக்கு வந்தபோது, மணியின் பெயர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டது குறித்து அப்போதைய மாவட்ட ஆட்சியர் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது.

இதைத் தொடர்ந்து இந்த வழக்கு மீண்டும் நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், ஜி.அருள்முருகன் அடங்கிய அமர்வு முன் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரரின் பெயரை நீக்கிய விவகாரத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளதாகவும், வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்வது தொடர்பான விதிகள் கண்டிப்புடன் பின்பற்றப்படும் என்றும் தலைமைத் தேர்தல் அதிகாரி தெரிவித்தார்.

இதையடுத்து, வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பான விதிகளை கண்டிப்புடன் பின்பற்றுவதை உறுதி செய்ய வேண்டுமென தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்ட நீதிபதிகள் வழக்கை முடித்து வைத்தனர்.